தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 164

நம் நாடு

தி.மு.க.தின இதழ் | ஆசிரியர்..அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு :
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை : மார்கழி 7உ செவ்வாய் (22—12—53) ★ ★ ★ வெளியூர் : மார்கழி 8உ புதன் (23—12—53)

சட்ட சபை திராவிடர் கட்சிக்கு தி.மு.க. பொதுச் செயலாளர் பாராட்டு

—(✶)—

'புதிய கட்சி ஆச்சாரியாருக்கு அதிர்ச்சியை கொடுத்திருக்கும்'

'முதலாளிகளை மூன்று வகையாகக் கண்டவர் கிண்டல் பேசுகிறார்'

'அவர்கள் குணம் தெரிந்தது அன்று- நம்முடன் இணைந்ததும் அவர்கள் பணம் தெரிகிறது!'

சென்னை மெமோரியல் மண்டபத்தில் அண்ணாதுரை

✶

சென்னை, டிச. 22—

'கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த தோழர் ஜீவானந்தம் அவர்களும், 'தினத்தந்தி' ஆசிரியர் தோழர் ஆதித்தன் அவர்களும் ஒன்றாகக் காஞ்சிபுரம் வந்து, ஐக்கிய முன்னணி பற்றி என்னிடம் பேசியபோது, 'நஷ்டஈடு தராமல், முதலாளிகள் சொத்தை எடுத்துக்கொள்கிற பொதுவுடைமைக் கோட்பாட்டினால் எப்படி ஐக்கிய முன்னணி அமைக்கப்படும்?' என்று நான் கேட்டேன். அதற்கு அவர் சொன்னார்— 'நாங்கள் முதலாளிகளை மூன்று வகையாகப் பிரித்திருக்கிறோம்: (1) பிறப்பாக்கு முதலாளி; (2) வெளிநாட்டு முதலாளி; (3) தேசிய முதலாளி— என்று' இதில் தேசிய முதலாளியை ஐக்கிய முன்னணியில் சேர்த்துக்கொள்ளலாமென்றார். அப்படிச் சேர்த்த ஐக்கிய முன்னணியில் இருந்தவர்கள் தான் இப்போது பிரிந்துவந்த சட்டசபை திராவிடக் கட்சியினர். அப்போது தோழர் ஆதித்தன், அவர்களுடன் கூடிக் குலாவி குதூகலித்திருக்கிறார். அன்று பணம் தெரியவில்லை— குணம் தென்பட்டது; இன்று பணம் தென்படுகிறது -அவர்கள் குணம் தென்படவில்லை,"

—என்று, சென்னையில் தாய்மார்கள் வரவேற்புக் கூட்டத்தில், தோழர் அண்ணாதுரை பேசும்போது குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் கூறியதாவது :—

"சென்னை சட்டசபையில் திராவிட கட்சி என ஒரு கட்சி ஏற்படுத்தியிருப்பதாக பத்திரிகையிலே பார்த்தேன் அதனால ஏற்பட்ட மகிழ்ச்சியில் நான் அதைப் பற்றி இன்னும் ஆராயவில்லை. முதலில் அவர்களுக்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"எங்களுக்கும், அவர்களுக்கும் தொடர்பில்லை என்று அவர்கள் சட்டசபையில் சொன்னால், காங்கிரஸ் மந்திரிகள் நம்பமாட்டார்கள்; 'இது, அண்ணாதுரை சொல்லிக் கொடுத்தது,' என்பார்கள். எங்களுக்கும், அவர்களுக்கும் சம்பந்தமில்லையென்று நான் இங்கே சொன்னால, 'இவர்கள் முற்கனவே பேசி வைத்துக் கொண்டது,' என்பார்கள்.

"சட்டசபை திராவிடக் கட்சியின் தோற்றம் ஆச்சாரியாருக்கு மன அதிர்ச்சியூட்டியிருக்கும்.'

புதிய சட்டசபையில் திராவிடக் கட்சியில சேர நான் முயலவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. நாமும் அவர்களும் ஒன்றாகக் கூடி, நெறி சட்டவிதி முறைகளை வகுத்துக் கொண்டால் தோழர்கள் : கோவிந்தசாமி, பழனியாண்டி, தெய்வசிகாமணி ஆகியவர்களை எல்லாம் இவர்களோடு மட்டுமல்லாமல், சட்டசபையில் நல்லதோர் எதிர்க் கட்சியையும், உருவாக்கலாம்.

'தினத்தந்தி' பத்திரிகையில், சில நாட்களுக்கு முன்பு, ஒரு கேலிச் சித்திரம் வரையப்பட்டிருந்தது. திராவிட சட்டசபைக் கட்சியைச் சேர்ந்தவர்களை ஜமீன்தாரைப்

(6-ம் பக்கம் பார்க்க)

'நடைபெற்றபோராட்டங்களில் தாய்மார்களைச் சேர்க்காதது தேவையற்றது என்பதால் அல்ல'

—:x:—

'அறப்போரில் ஈடுபட அவசியமானால் அவர்களையும் அழைப்பேன்'

தாய்மார்களின் ஆர்வத்திற்கும், ஆற்றலுக்கும் பொதுச் செயலாளர் நன்றி

★

"அன்று, கர்ப்பவதியான தாய்மார்கள் காட்டிலே விடப்பட்டார்கள்; சிறையில் அடைக்கப்பட்டார்கள்; காதல் மொழி பேசியோருக்கு காராக்கிரக வாழ்வு கொடுக்கப்பட்டது. அப்படி இருந்தும், தலைவர் பெரியாருக்கு 'பெரியார்' பட்டம் கொடுத்தவர்கள், சென்னை தாய்மார்கள்தான்; எனவே, மீண்டும் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்"

என்று, தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்ற 'தாய்மார்கள் வரவேற்புக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் கூறியதாவது :—

"வரவேற்பளித்துப் பெருநிதியளித்த தி. மு. கழகத் தாய்மார்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"இன்றைய வரவேற்புக் கூட்டத்தில், பொருட் செல்வத்தையும், அருட் செல்வத்தையும், சட்டசபை செல்வத்தையும் பெற்றோம்.

"முதலில் பேசிய தாய்மார்கள், 'சென்ற போராட்டங்களில் பெண்களுக்கு இடம் கொடுக்கவில்லை; மேற்கொண்டாவது இடமளிக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்கள். சென்ற போராட்டங்களில் பெண்களுக்கு இடமளிக்காதது, அவர்கள், தேவையில்லை என்றல்ல; அவசியமேற்படும் பொழுது அவர்கள் கண்டிப்பாக எனது அழைப்பைப் பெறுவார்கள்.

"தங்க விலங்கு பூட்டப்பட்டிருந்தாலும், கல்லூரிக் கட்டுப்பாடு இருந்தாலும், குடும்பப் பாரத்தில் சிக்கிப் பட்டிருந்தாலும், சைவப் பூச்சு இருந்தாலும், மதப் பற்று இருந்தாலும் தேவைப்படும் நேரத்தில் அவர்கள் எனது அழைப்பைப் பெறுவார்கள்.

"தாய்மார்களின் இந்த முயற்சியில் பெற்ற வெற்றி, ஆண்களுக்கு ஒரு அறைகூவல்; பெண்கள் ரூ. 901 தருவதென்றால், ஆண்கள் வெட்கப்பட வேண்டிய விஷயம் தான். வெட்கத்தால் செயலற்றுப் போய்விடக் கூடாது. சென்னை தி. மு. கழக மாணவர்களும் இத்துறையில் முன்வர வேண்டும்.

"எந்த நாட்டையும் தாய்நாடு என்றுதான் அழைப்பார்கள்—ஜெர்மனியைத் தவிர! தாயுள்ளத்தில் கனிவு உண்டு; இரக்கமுண்டு. அந்தத் தாயுள்ளத்திற்கு என் நன்றி!

(4-ம் பக்கம் பார்க்க)

நடிகர் நாயக விழா

பெரியார்—சி. ஆர். பங்கேற்றனர்

சென்னை, டிச. 21—

நேற்று மாலை ஐகோர்ட் கடற்கரையில் நடிகர் நாயகம் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பெரியார் ராமசாமி அவர்களும், சி. இராசகோபாலாச்சாரியாரும் கலந்து கொண்டார்கள்.

கூட்டத்திற்கு தோழர் மொகைதீன் தலைமை வகித்தார். நடிகர் நாயகத்தைப் பாராட்டி பெரியார், சி. ராஜகோபாலாச்சாரியார், அமைச்சர் பழனிச்சாமி கவுண்டர், மீனும்பாள் சிவராஜ், கே. விநாயகம், ப ஜீவானந்தம், என். ஏ. பி பூபசபதி ஆகியோர் பேசினர்

பணம் படைத்தோரின் பணம் தேவையில்லை!

ஏழை எளியவர்களால்தான் நிதி நிரம்பவேண்டும்

"தி. மு. கழகத்தை ஆதரிப்பவர்கள், கொள்கை அறியாதவர்களல்ல; எவரும் கோடீஸ்வரருமல்ல! காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும், கள்ள மார்க்கெட் காரர்களாக இருந்தாலும் சுகபோகிகளாக இருந்தாலும், சிற்றரசர்களாக இருந்தாலும், அவர்களிடம் பணம் திரட்டுவதானால் தேவைப்படும் ரூ. 2,0000-த்தை இருபது நபர்களிடம் வசூலித்து விடலாம்."

"அப்படிக் கிடைக்கின்ற பணம், 'பிளேக்' பிடித்தவன் வீட்டில், குஷ்டரோகி, ரொட்டியில் வெண்ணெய் தடவிக் கொடுக்க, அதைக் காசநோய்க்காரன் வாங்கிச் சாப்பிடுவது எப்படியோ, அப்படித்தான்."

"கூலி வேலை செய்கிறவர்களும், இலங்கையில் தேயிலைத் தோட்டத்தில் தேயும் சிறப்புக்குரிய செந்தமிழ்ச் செல்வர்களும் எட்டணா, காலணாக்களாகத் தந்தது, இன்று வரை ரூ. 10,000"

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 22—12—53 செவ்வாய்

901!

தி. மு. கழகத்தின் பலத்தைப் பரீட்சிப்பதற்காக வென்றே தூத்துக்குடி சதி வழக்கைத் தொடுத்திருக்கிறது ஆச்சாரியார் சர்க்கார் என்பது நாடறிந்த உண்மை. அந்த எதேச்ச திகாரி, அதிகார வெறி கொண்டு ஏவிய அடக்கு முறைகளை எல்லாம், தி. மு. கழகம் மலர்ந்த முகத்தோடு ஏற்றுக்கொண்டு, முன்னிலும் வீரம் பாய்ந்த உள்ளத்தோடு, வேகமாக வளர்ந்து கொண்டு வருகிறது என்பதை, அவரும் இப்புறம் தெரிந்துகொண்டுள்ளார் என்பது அவர் வாக்கிலிருந்தே அறியக் கிடக்கிறது.

தாம் பதவிபெற்ற காலை, நமது தி. மு. கழகத்தைக் குறித்துப் பாராமுகமாக இருந்த அந்த 'அமைதை,' நாள் செல்லச் செல்ல நாட்டின் எதிர்காலத்தை ஆளும் ஆற்றல் நமது கழகம் ஒன்றுக்கு மட்டுமே இருக்கிறது என்ற மகத்தான உண்மையை உணர்ந்துகொள்ளத் தொடங்கினார்.

துவக்கத்தில் நமமைப்பற்றி அலட்சியமாகக் கருதிய சாணக்கியர், காலப்போக்கில், நமது கழகத்துக்கும், திராவிடப் பெருங்குடி மக்களுக்கும் இடையே வேகமாக உருவாகி வரும் அன்பு பிணைப்பை அறிய ஆரம்பித்தார்.

அப்படித் தெரிந்து கொண்டதின் பலனாகத்தான் 'எனது முதல் சொற எதிர்' என்று, எவரையோ தொடக்கத்தில் கூறிய கனம் ஆச்சாரியார், சில பல நாட்களுக்கெல்லாம் தமமுடைய எதிர்ப்பட்டியலை நமது கழகத்துக்கு மட்டுமே ஒதுக்கிவைக்க வேண்டிய கட்டாயத்திற்கு வந்தார்.

நமது கழகத்தைக் குறிப்பிடாமல், நம்மைத் தீர்த்துக் கட்டிவிடலாம் என்று அவர் ஆரம்பத்தில் கருதியது வெறும் பகற்கனவாய்ப் பொய்த்துப் போய்விட்டது. நமது கழகத்தினரின் புனிதமான கட்டுப்பாடு, அமைதியான அறப்போராட்டம், நமது தலைவர்களின் கண்ணியமான நடைமுறை—இவைகளுக்கு திராவிடப் பெருமக்கள் ஆர்வத்தோடு அளிக்கும் பேராதரவு ஆகிய அனைத்தும் அமைச்சர் ஆச்சாரியாரின் கருத்தையும் கணக்கையும் திறக்க வைத்தது.

நமது கழகத்தின் போராற்றலைச் சரிவரப் புரிந்து கொண்ட அந்த விநாடியே, ஒரு கணமும் தாமதிக்காமல், நம்மை அழிக்க ஏவிய வெளிப்படையான அடக்குமுறைகளைக் கைவிட்டு, வேறு பயங்கரமான அழிவுத் துறைகளை மேற்கொள்ள முனைந்தார். நமது ஆணிவேரை அறுக்க வேண்டும் என்று தமது கடமைகளை தினருக்கு உருக்கமான வேண்டுகோள் விட முன்வந்தார். நமது கழகத்தின் கணக்கைத் தீர்த்துக்கட்டிவிட வேண்டும் என்று அங்கலாய்க்கத் தொடங்கினார். நமது பொதுவாழ்வு வரலாற்றைச் சபலமாகத்தான் இருக்கப் பார்த்துக்கொள்ள உடனே முயல வேண்டுமென்று காங்கிரஸ்காரர்களுக்குத் தூபமிட்டார். ஈ, எறும்பு என் தேசம் என்ன ஆயிற்றோ என்பதைக்கூட அறிந்து பேச முடியாத அவர்க்கு ஆத்திரம் பொங்கி அதனை அவரிடம் இருந்து தாம் சொல்லப்பட்ட அறிவுநிலை அழிந்து, கடைசெடுத்த மனோ நோய் முற்றியதின் விளைவாக, அமைச்சர் ஆச்சாரியார் உருமாறினார்.

அமைச்சர் ஆச்சாரியாரின் இந்த அரசியல் புலி வேஷம் கண்டு, நமது தி. மு. கழகம் ஆத்திரங்கொண்டுவிடவில்லை; அதற்கு மாறாக அவர்தம் அலமறுதலைக் கண்டு அனுதாபப்பட்டது. ஆத்திரவெறியும், அதிகார வெறியும் ஒரு இணைப்பத் துணைகளைப் பெற்ற தலைவரை—அவர் வாழ்க்கையின் மாலையை நெருங்கிய பின்னரும்—எவ்வளவு பாடுபட வைத்துவிட்டன என்பதை நுணுகி ஆராய்வதில் நாம் கருத்தைச் செலுத்தினோம். அதனால் பெறப்பட்ட அறிவொளியின் துணை கொண்டு, அவருடைய பொதுவாழ்வைப் படம் பிடித்தோம். பிறகு,

சில பல காங்கிரஸ்காரர்களுக்கு, பிரதமராம் இந்தச் சலசலப்பு, பலாத்காரச் செயல்களில் ஈடுபடும்படியாகப் போட்ட தூபம், அவர் விரும்பியவண்ணம், அவருடைய உள்ளம் பூரிக்கும் வகையில் பரவலாக இல்லாமற் போகவே அத்துறையிலும் அவருக்கு ஏமாற்றம் கண்டுவிட்டது. திராவிடரைக் கொண்டு திராவிடரை அழிக்க அமைச்சர் ஆச்சாரியார் இட்டிய திட்டம் முழுத் தோல்வியில் முடிந்துபோகவே, நமது கழகத்தை ஒழிக்க, கழகத் தோழர்கள்மீது பயங்கரமான வழக்குகளைத் தொடுக்க முனைந்தார்.

இந்தத் துறையிலும் நாம் ஆச்சாரியாரை முழுத் தோல்வி அடையச் செய்தாக வேண்டும். நீதியின் நெடிய படிக்கட்டுகளை ஏற வேண்டியதானால், தகுந்த வன்றுக்கோல் இல்லாமல் நடைபெறுகிற காரியமல்ல என்பதை நாம் சொல்லத் தேவை இல்லை. வன்றுகோல்கள் சிறந்த வழக்கறிஞர்களேயாவர். வழக்கறிஞர்கள் நம் பக்கத்தில் வழக்காட வருவதென்பது மிக மிகச் சிரமமான காரியமாகும். வழக்கறிஞர் முகமோ பார்ப்பன மக்களே பெரும்பான்மையோராக வீற்றிருந்துள்ள சிந்தாகுலம் தரும் பெரும் சந்தையாகும். அதிலிருந்து சிறந்த நம்மவர் சிலரைப் பிரித்தெடுப்பது என்பது இலகுவான காரியமல்ல. அவர்களும் நிலைமைக்குக் கட

தூத்துக்குடி வழக்கு நிதி

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையத்திலிருந்து தூத்துக்குடி நிதிக்குப் பொருள் வசூல் செய்து, கொடுக்கும்படி வேண்டிக்கொண்டு, நம் கழகத் தோழர்கட்கும் கிளைக் கழகங்கட்கும் ரசீதுப் புத்தகங்கள் அனுப்பியதைப் பெற்றுக்கொண்டு இன்றுவரை, வசூல் செய்த தோழர்கள், வசூல் செய்த தொகையையும் மீதி ரசீது புத்தகங்களையும், தலைமை நிலையத்திற்கு அனுப்பி வைக்காமலிருக்கிறார்கள். எல்லோருக்கும் கடிதங்களும் எழுதினோம்; பதில் இல்லை. இனியும், காலம் கடத்தாமல் வசூல் செய்த தொகையையும் மீதமுள்ள ரசீது புத்தகங்களையும், தலைமை நிலையத்திற்கு உடன் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். ரசீது புத்தகங்களை உபயோகிக்காமலும், தொகை வசூல் செய்யாமலிருந்தாலும் கவலையில்லை. உடன் ரசீதுப் புத்தகங்களை மட்டும் அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தூத்துக்குடியில் ஒருசில தோழர்கள் தலைமை நிலையத்திலிருந்து அனுப்பிய ரசீதுப் புத்தகங்களை உபயோகிக்காமல் தனியாக ரசீதுப் புத்தகம் வெளியிட்டு, அதைக் கொண்டு வசூல் செய்திருப்பதாகவும், செலவு செய்திருப்பதாகவும் செய்தி வந்தது. அதில், 'எங்கள் பெயர், வசூல் விவரம் 'நம் நாட்டி'ல் வரவில்லையே? ஏன்?' என்று கடிதம் எழுதி வருகிறார்கள். பொறுப்பாளர் என்ற முறையில் 'தூத்துக்குடித் தோழர்கட்குத் தனிமுறையில் ரூபாய் அனுப்பவோ, செலவு செய்வதோ கூடாது எல்லா நடவடிக்கைகளும், தலைமை நிலையப் பொறுப்பில் நடைபெற வேண்டு'மென்றும், கண்டிப்பாகக் கடிதம் எழுதினேன்.

இன்றுவரையில் தலைமைக் கழகத்தார் அனுப்பிய ரசீதுப் புத்தகங்களையும் திருப்பி அனுப்பவில்லை. இவைகளைப் பற்றி விசாரணை செய்து விவரம் அறிவிக்கும்படி நம் தோழர் இரே இளம்வழுதி (அட்வகேட்) அவர்களுக்குக் கடிதமும் எழுதியுள்ளோம். அவர்கள் பதில் வந்த பிறகு மற்ற விவரங்களும் விளக்கமான அறிக்கையும் வெளிவரும்.

அறிவகம், சென்னை 22-12-53 } ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ. பொறுப்பாளர், தி. மு. கழகத் தலைமை நிலையம்.

முசாதிக்கிற்கு மூன்றாண்டு தனிக் காவல்!

(:)

தேசத் துரோக வழக்கில் தீர்ப்பு

டெஹ்ரான், டிச. 21—

ஈரான் பிரதமர் பதவியிலிருந்து விலக்கப்பட்ட டாக்டர் முசாதிக் மீது தொடரப்பட்ட வழக்கில் இன்று தீர்ப்பளிக்கப்பட்டது. அவர்மீது தேசத்துரோக குற்றம் சுமத்தப்பட்டு அதன் காரணமாக இன்று மூன்று ஆண்டு தனிக்காவல் தண்டனை தரப்பட்டது.

ஈரானுக்கு முசாதிக் செய்த சேவைகளைக் காரணமாகக் கொண்டு அவருக்கு மிகக் கடுமையான தண்டனை விதிக்க வேண்டாமென ஷா ஈரான் மன்னர் சிபாரிசு செய்திருந்தார். சர்க்கார் வக்கீல முசாதிக்குக்கு மரண தண்டனை தரவேண்டுமென கோரியிருந்தார்

ஆனால், முசாதிக், "நான்

கட்டுப்பட்டவர்களேயாவர். அந்தக் கட்டுப்பாட்டை உடைத்தெறிந்து நமது சார்பில் மன்றமேற வருகிறவர்களுக்கு நாமும் நமது தாராளத்தைக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம். எனவே, பொருள் நிறையத் தேவைப்படுகிறது.

இதுபற்றி உருக்கமான வேண்டுகோளை பொதுச் செயலாளர் ஏற்கனவே வெளியிட்டிருக்கிறார். நிதி வளர்ச்சி மகிழ்ச்சி தரும் முறையில் வளரவில்லை என்று மனம் நைந்து அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

'அஞ்சற்க! இதோ, நாங்கள் உள்ளோம்!' என்று உடைந்த உள்ளத்துக்கு உற்சாகமூட்டும் முறையில் சென்னை திராவிடத் தாய்மார்கள் ஒன்றுகூடி இருக்கிறார்கள். அவர்கள் முயற்சியில் தாயன்புப் பொங்கி வழிகிறது. குறைந்த ஒரு கிழமை காலத்துக்குள் 901 ரூபாயை 'தூத்துக்குடி சதி வழக்கு நிதி'க்குச் சேகரித்துக் கொடுத்தது, அவர்களுடைய பணி புரியும் ஆற்றலுக்கு ஒரு எடுத்துக்காட்டாக மிளிர்கிறது.

தாய்மார்கள் நிதி அளிப்பு, மற்றவர்களின் உறக்கத்தை மிகைப்படுத்திக் காட்டுவதாக இருக்கிறது என்பதை வெட்கத்துடன் சொல்லிக் கொள்ளுகிறோம். இதிலிருந்து நாம் தப்புவதற்கு, நிதி திரட்டுவதில் மாதர் காட்டிய ஆர்வத்தை வழிகாட்டியாகக் கொண்டு, தூத்துக்குடி நிதியை வெகு விரைவில் வழியச் செய்ய வேண்டும். தாய்மார்கள் அழுக்காறு கொள்ளும் அளவிற்கு நாம் நிதியை நிரப்புவதில் முனையவேண்டும் என்று ஒவ்வொருவரையும் வேண்டிக் கொள்ளுகிறோம்.

குறைந்த காலத்தில் இப்பெருந்தொகையைக் கொடுத்து, மற்றவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்த பெற்றையும் பதித்துக்கொண்ட திராவிடத் தாய்மார்களை நாம் மனமாரப் பாராட்டுகிறோம். தாய்மார் நிதி அளிப்பில் மறைந்து கிடக்கும் திராவிட மாவீரத்தையும் அமைச்சர் ஆச்சாரியார் அறியக் கோருகிறோம். இந்த மூன்று சோதனையிலும் ஆச்சாரியார் வெட்கி நாணுவார் என்பதை அவர் உணர வேண்டுகிறோம்.

சி. ஆர். ராஜிநாமா?

27-ந் தேதி கட்சிக் கூட்டத்தில் கொடுக்கப்படும்?

★

27—12—53-ல் நடைபெற இருக்கும் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில், சென்னை முதல் மந்திரி சி. இராஜகோபாலாச்சாரியார், கட்சித் தலைமைப் பதவியையும், முதல மந்திரி பதவியையும் ராஜிநாமாச் செய்வார் என்று விஷயமறிந்த வட்டாரத்திலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது.

சென்ற 14-ந் தேதி நடைபெற்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில், ஆச்சாரியார் எதிர்ப்பாளர்கள் கொண்டுவந்த கண்டனத் தீர்மானத்தை, 27-ந் தேதி கூட்டத்தில் விவாதிப்பதென முடிவு செய்யப்பட்டது அல்லவா?

அந்தக் கூட்டத்தில், எதிர்ப்பாளர்கள், கண்டனத் தீர்மானத்தைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்றும், கல்வித் திட்டத்தை வாபஸ் பெற வேண்டுமென்றும் வற்புறுத்தினால், ஆச்சாரியார் உடனடியாகக் கட்சித் தலைமைப் பதவியையும், முதன் மந்திரி பதவியையும் ராஜிநாமாச் செய்துவிடத் தயாராக இருப்பார் என்று தெரிகிறது.

அப்படியே அவர் ராஜிநாமா செய்துவிட்டால், எதிர்ப்பாளர்கள், யாரைத் தேர்ந்தெடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பது புரியாத புதிராக இருக்கிறது.

—'வி அ' 20—12—53

பேராசிரியர் சற்குணர் நினைவு நாள்

சென்னை, டிச 23—

பேராசிரியர் ச. த. சற்குணர் நினைவு நாளை முன்னிட்டு, பெரம்பூர் ஆர். பி. சேதுப் பிள்ளை அவர்கள் தலைமையில், தோழர்கள், ஏ. பாலசிங்கசத்தியனார், என். சங்கரன், எம். மீரான் சாகிப், மயிலை சிவ முத்து, எம். ஏ. துரை அரங்கனார், டாக்டர் தேவசேனாபதி, அருணா. தம்பையா, ராமசாமி ஆகியோர், புரசை முத்தையா செட்டியார் பள்ளியில் 23—12—53 புதன் மாலை 5-மணிக்குப் பேசுவார்கள்.

"ஒரு நாளும் மன்னிப்புக் கேட்கவில்லை — கேட்கவும் மாட்டேன்—நான் தவறொன்றும் செய்துவிடவில்லை — சட்டப்படி உங்கள் தீர்ப்பை அளிக்கத்தான் வேண்டும்," என்று, கோர்ட்டில் கூவினார்.

மன்னித்து விட்டதாக எழுதிய ஈரான் மன்னரின் கடிதத்தை கோர்ட்டில் வாசித்த போதுதான், முசாதிக், மேற்கண்டவாறு இரைந்தார்.

மன்னரின் கடிதத்தில், "முசாதிக், மகனை என்னைப் படிதாண்ட, என்னையும் கிளைகளைத் தேசிய மயமாக்கியிருக்கிறார்," என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், முசாதிக்கிற்கு மரண தண்டனை அளிக்கப்படாவிடில், தான், அபீல் செய்யப் போவதாகத் தீர்ப்புக் கூறுவதற்கு முன்பே சர்க்கார் வக்கீல் சொல்லிக் கொண்டிருந்தார்.

தைப் பொங்கலன்று அணியும்

'நாம் திராவிடர்—நாம் பேசுவது திராவிட மொழி'

—[o]—

'தமிழை ஆட்சிமொழியாக்க உடனடியாக முயல வேண்டும்'

தமிழ் ஆட்சி மொழி மாநாட்டின் தலைவர் கசபதி, எம். எல். சி., விளக்கம்

சென்னை, டிச 21—

"தென் இந்தியப் பகுதியில் நான்கு மொழிகளைப் பேசுகிறார்கள்; அம்மொழிகள், முறையே தமிழ், தெலுங்கு மலையாளம், கன்னடம் இம்மொழிகள் நான்கும் திராவிட மொழிகளாதலால் இம்மொழி பேசுகிறவர்களைத் திராவிட மக்கள் என்பர். இவர்கள் தென்னாட்டில் ஒவ்வொரு தனித்த குறிப்பிடத்தக்க பகுதிகளிலே வாழ்ந்து வருவதையும் பார்க்கலாம்."

—என்று, நேற்று மாலை, சென்னை அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற தமிழ் ஆட்சி மொழி மாநாட்டில் தலைமை தாங்கிய தோழர் ஆ கசபதி அவர்கள் பேசும்பொழுது குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசியதாவது:-

"ஆந்திர நாடு பிரிந்து போக, இப்போது இருக்கும் சென்னை மாகாணம், பெரும்பான்மையும் தமிழ் பேசும் தமிழ் மக்கள் கொண்ட நாடாக இருக்கிறது. 14-மாவட்டங்களைக் கொண்ட இம்மாகாணத்தின், 12 மாவட்டங்கள் முழுவதும் தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்றார்கள். சிறு பகுதியான "மலபார்" என்னும் பெயர் கொண்ட ஒரு மாவட்டத்திலும், "கன்னடம்" என்ற பெயர் கொண்ட மாவட்டத்திலுமே மலையாள மக்களும் கன்னட மக்களும் வாழ்கிறார்கள். எவ்வாறு தமிழர்கள் ஆந்திர நாட்டு எல்லைப் பகுதியான சித்தூர் மாவட்டத்தில வாழ்கிறார்களோ, அதுபோல் இம்மலையாள மக்களும், கன்னட மக்களும், தமிழ் மாகாண எல்லைப் புறத்தில் இருக்கிறார்கள்.

அரசியல் பிரிவுச் சட்டம் 210 சொல்லுவது:—

'ஒரு நாட்டுச் சட்டசபையின் நடைமுறை வேலைகள், அந்நாட்டின் ஆட்சி மொழியிலாவது, அல்லது இந்தி மொழியிலாவது அல்லது, ஆங்கில மொழியிலாவது நடைபெறும். இம்மொழிகளில் விளக்கமாகப் பேச இயலாத சட்டசபை அங்கத்தினர், சபாநாயகரின் அனுமதி பெற்றுத் தமது தாய்மொழியில் பேசலாம்."

இப்போது நமது சட்டசபையைக் கவனிப்போம். அங்கே ஆங்கிலத்திலதான் நடைமுறைகள் அச்சிடப்பட்டிருக்கின்றன. அமைச்சர்கள் பேசுவது ஆங்கில மொழியிலதான். ஏனைச் சட்டசபையினர் ஆங்கிலத்திலும், தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளிலும் பேசுகிறார்கள். நாம முதலாவதாகக் கேட்கலாம் அச்சிட்டு வழங்கும் நடைமுறைகளைத் தமிழில் அச்சிட்டு வழங்குவார்களா? தமிழில் அச்சிட்டால் மற்றமொழிகளிலும் கேட்போருக்கு அச்சிட்டு வழங்க வேண்டி வருமே என்று சிலர் உரைப்பார்கள். ஆனால், தமிழ் மொழி ஆட்சி மொழியாய் செய்விக்கப்பட்டிருந்தால் இந்த வினாவே எழாது. ஆங்கில மொழி அரசு மொழியாய் விதிக்கப்பட்டு இருப்பதால்தான் ஆங்கிலத்தில் அச்சிடப்படுகிறது. தமிழை ஆட்சி மொழியாய்ச் செய்விக்காத காரணத்தால் அது தமிழில் அச்சிடப்படவில்லை.

அரசியல் சட்டம் 210 பிரிவின் 2-வது உட்பிரிவு சொல்வதாவது:—

"ஒரு நாட்டுச் சட்டசபை ஆங்கில மொழியை நீட்டிக்காது விட்டுவிட்டால், 15 ஆண்டுக்கு இறுதியில் ஆங்கிலமொழி மாண்டதாகக் கருதப்படும்."

ஆகையால் இச்சட்டப்படி ஆங்கிலத்திற்கு ஒரு காலவரையறை உண்டு. இதற்குப் பிறகு இந்தி மொழி நாட்டுக்குள் முதல் இடம் பெறும்; ஏனெனில் இப்போதுள்ள சட்டப்படி நம நாட்டில் தமிழ் மொழியை ஆட்சி மொழியாகச் செய்யாது இருப்பதால்

345-வது பிரிவு சொல்லுவது என்னவென்றால் — 'ஒரு நாட்டின் சட்டசபை நாட்டில இயங்கும் ஒரு மொழியையோ, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளையோ, அல்லது இந்தி மொழியையோ சட்டம் செய்து ஆட்சி மொழியாக அமைத்துக் கொள்ளலாம்"

கழகக் கூட்டம்

★

கீழப்பெரும்பள்ளம்
24-12-53 வியாழக்கிழமை
மாலை 5 மணிக்கு
பேசுவோர்:
சி பி சிற்றரசு
வி ஏ பாண்டியன்

தூத்துக்குடி சதி வழக்கு நிதி நாடகம்

நெல்லையில், 27—12—53-ல், மதுரை திராவிட புது மலர்ச்சி மன்றத்தார் நடிக்கும் 'ஒரே வழி' நாடகம் நடைபெறும். இடம், பின்னர் அறிவிக்கப்படும் என்று நெல்லை மாவட்டச் செயலாளர் அறிவித்துக்கொள்கிறார்.

திருவத்திபுரம் தி. மு. க. தோழர்களுக்கு

26—12—53 சனிக்கிழமை மாலை ஆறு மணிக்கு. தோழர் பு. கு. ஜனார்த்தனம் அவர்கள் வீட்டு மேலமாடியில் கீழ்க்கண்ட விஷயங்களை ஆலோசிக்கப்படும். உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் இதையே அழைப்பாகக் கருதி வர வேண்டப்படுகிறது.

1. சென்ற வருட 'பொங்கல் விழா' வரவு செலவு கணக்கு;
2. இவ்வருட பொங்கல் விழா பற்றி;
3. இன்னும் பல முக்கிய விஷயங்கள்.

உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் வரவேண்டுகிறேன் என தி. மு கழக செயலாளர் இ சரவணன் அறிவிக்கிறார்.

'தூத்துக்குடி நிதி'க்கு கலைவாணர் பங்கு

'பணம்' நாடகம் நடத்த திட்டம்

பூந்தமல்லியில் கலைவாணர் என். எஸ். கே.

'தூத்துக்குடி நிதிக்குத் தாமும், தமது குழுவினர்களுடன் 'பணம்' என்ற நாடகத்தை நடத்தி, அதன் மூலம் கிடைக்கும் தொகையை நிதியில் சேர்க்கத் திட்டமிட்டுள்ளேன்," என்று, "காதல் ஜோதி" என்ற நாடகத்திற்குத் தலைமை வகித்து சிறப்புரை வழங்குகையில், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டார்.

சென்னை, டிச 21—

செங்கற்பட்டு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம் பூந்தமல்லி கரையான்சாவடி நடேசர் தியேட்டரில், தி மு கழகச் சார்பில் 19-12-53 இரவு 10-மணிக்கு அண்ணாதுரை அவர்கள் தலைமையில், தோழர்கள் என். எஸ் ராஜேந்திரன், டி. வி நாராயணசாமி ஆகியவர்களும் அவர்கள் குழுவினரும், "திருமணம்" என்ற நாடகத்தைத் திறம்பட நடித்துக் காட்டினார்கள்.

20-12-53 இரவு 7-மணிக்கு மேற்படி தியேட்டரில் கலைவாணர் என். எஸ் கிருஷ்ணன் அவர்கள் தலைமையில், நடிப்புப்புலவர் தோழர் கே. ஆர். ராமசாமி அவர் தம் குழுவினர்களால் "காதலஜோதி" என்ற நாடகத்தைத் திறம்பட நடித்துக் காட்டினார்கள்.

இந்த இருநாடகங்களிலும், முதல் நாளன்று, தோழர் அண்ணாதுரை அவர்கள், நடிகர்களையும், நாடகக் கருத்துக்களையும், நாடக அமைப்பையும் பாராட்டிப் பேசினார். தூத்துக்குடி நிதிக்குப் பொருளுதவும் பொருட்டு இந்த நாடகங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த இரு நாடகங்கள் வசூல் மூலம் ரூ 1001 (ஆயிரத்தி ஒன்று) சேர்க்க அன்புடன் இசைந்திருப்பதையும், இம்முயற்சிக்குக் கழகத் தோழர்களும், பொது மக்களும் ஆர்வத்துடன் உழைத்தும், நிதி சேர்த்தும் கொடுக்க முன்வந்ததையும் நம் கழகத் தோழர்கள் மீது சர்க்கார் போடப்பட்டிருக்கும் சதிக் குற்றச்சாட்டிலிருந்து மீட்கப்படவும், நீதி பெறவும் வழக்காடும் நம் முயற்சிக்குப் பொதுமக்கள் காட்டும் ஆர்வம் சர்க்காருக்கு நல்ல விழிப்புணர்ச்சியைத் தரும் என்றும், விளக்கமாக விரிவுரையாற்றினார்.

"திருமணம்" நாடக ஆசிரியர் தோழர் சேதுராமன் அவர்கள் காலத்திற்கும், கருத்திற்கும் ஏற்ற சிறந்த கருத்துக்களை, அண்ணாவைப் பின்பற்றி எழுதியும், நாடகங்கள் மூலம் நாட்டுக்குப் பணி செய்ய முன் வந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

தோழர் சி வி எம். அண்ணாமலை அவர்களாலும், நடிகர் என். எஸ் இராஜேந்திரன் அவர்களாலும் நன்றி கூறி, மலர்மாலைகள் சூட்டினர்கள். முதல் நாள் வசூல் ரூ. 500-ம் கொடுத்தார்கள்.

இரண்டாம் நாள் நாடகத்திற்குத் தலைமை வகித்த, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் பேசுகையில், "நாடகக் கலை, நாட்டில் நடக்கும் சமூகக் கொடுமைகளையும், வறுமை—பட்டினி—பஞ்சம் போன்ற பொருளாதாரச் சீர்கேடுகளையும், மக்கள் மனதில் பதியும்படி செய்யவும், உணரும்படி செய்யவும், நல்ல கருவியாக இருக்கிறது என்றும், நடிகர்கள் திறம்பட நடித்துக் காட்டியதாகவும், தாமும் தமது குழுவினர்களுடன் "பணம்" என்ற நாடகம் நடத்தி, அதன் மூலம் கிடைக்கும் தொகையை நிதியில் சேர்க்கத் திட்டமிட்டிருப்பதாகவும் கூறி, இறுதியில் பாடல் பாடி முடித்தார்.

நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி இறுதியில் நன்றி கூறி, பாடல்கள் பாடினார்.

தோழர்கள்: சி. வி. எம். அண்ணாமலை, சம்பந்தம் ஆகியவர்கள் நன்றி கூறியதுடன், இரண்டாம் நாள் நாடக வசூலில் வரவு—செலவு கணக்கைப் பார்த்துக்கொண்டு மீதிப் பணத்தைக் கொடுப்பதாகவும், செலவு அதிகம் ஏற்பட்டு விட்டபடியால் மேடையில் ரூ 1001 (ஆயிரத்தி ஒன்றும்) குறிப்பிட்டபடி கொடுக்க முடியாமலிருப்பதாகவும், எப்படியும் குறிப்பிட்டபடி தொகையைச் சேர்த்துக் கொடுப்பதாகவும் கூறினார்கள்.

இந்த இரு நாடக வசூல் தொகையும் தோழர் சி வி. எம். அண்ணாமலை அவர்களிடமே இருக்கிறது.

"இந்தியால் நம்மை ஒன்றுபடுத்தும் நாள் வரலாம்—வராமற் போகலாம்"

"மொழி வழியிலேயே இந்தியத் துணைக் கண்டத்தைப் பிரிக்க வேண்டும்"

கவர்னர் திவாகர் தலைமையில் யூனியன் வியாபார மந்திரி விளக்கம்

பம்பாய் டிச. 20—

'நாட்டுப் பற்றுக்கு இரண்டாவதாக உள்ளது மொழியபிமானமாகும். மொழிப்பற்று பிளவை உண்டாக்கும் இயக்கமல்ல."

"நாட்டுப் பற்றுக்கு அடுத்தாற்போல் மக்களை ஒன்றுபடுத்துவதில மொழி ஒரு சக்தியாகும். ஒரு நாடு பிரிக்கப்பட வேண்டுமானால், இந்தியா போன்றதொரு துணைக் கண்டம் பிரிக்கப்பட வேண்டுமானால — மொழிவழி ஒன்றை மட்டுமே கொண்டுதான் பிரிக்க முடியும். ஏனெனில், தடைகள் அனைத்தையும் ஊடுருவிச் செல்லக் கூடியது மொழியாகும்."

"இந்தி மொழி நம்மனைவரையும் ஒன்றாக ஒரு நாளைக்குப் பிணைக்கலாம். அந்த நாள் வரலாம — வராமல் போகலாம; அதுவரை, மொழியபிமானமே நம்மை ஒன்றுபடுத்தும் பலமான பிணைப்பாகும்."

—இவ்வாறு, யூனியன் வியாபார மந்திரி டி. பி கிருஷ்ணமாச்சாரி, பம்பாயில வாழும கன்னட மொழி மக்களால், பீஹார் கவர்னர் ஆர். ஆர். திவாகர் அவர்களுக்கு அளித்த வரவேற்பில் குறிப்பிட்டார்

கவர்னரும்; கர்நாடக மொழி மாநில அமைப்பு, நாட்டு ஒற்றுமைக்குக் கேடு சூழக்கூடியது என்ற கருத்துக்குத் துளியும் ஆதாரம இடையாது என்றும் குறிப்பிட்டார்.

சேலம் மாவட்ட தி. மு. க. தோழர்களுக்கு வேண்டுகோள்

★

"தி மு கழகத் தலைவர்களை, சேலம் மாவட்டத்தின் சார்பில வரவழைத்து, வரவேற்பு அளிக்கவும், அது பொழுது ஒரு கணிசமான தொகையை தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்குக் கொடுக்கவேண்டியிருப்பதாலும், தூத்துக்குடி சதி வழக்குக்கு நிதி அனுப்பும் தோழர்கள் தயவு செய்து, சேலம் மாவட்ட பொருளாளர் பி. எம். குப்புசாமி, c/o சின்னுன் செட்டியார் & சன்ஸ், தர்மபுரி, சேலம் மாவட்டம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்" என்று சேலம் மாவட்ட துணைச் செயலாளர் பி ராமலிங்கம் கேட்டுக் கொள்கிறார்.

காங்கயம் தி. மு. கழக செயற்குழு கூட்டம்

15—12—53ல், தி மு கழக செயற் குழுக் கூட்டம் தோழர் ஈ. வி. கே. சம்பத் தலைமையில நடைபெற்றது. அதுபோது, தோழர் கே. வி. முத்தையா அவர்கள் செயற்குழு உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ததை செயற்குழு ஏற்றுக்கொண்டது.

புத்தாடை, கைத்தறியாயிருக்கட்டும்

'இந்திய சட்டத்துக்கு முதல் நெம்பர் எதிரி சி. ஆர்.'

'பிற்பட்ட இன மக்களுக்கு பட்ஜட்டில் ஒன்றுமே இல்லை'

சட்ட சபை திராவிடக் கட்சி, உழைப்பாளர் கட்சித் தலைவர்கள் முழக்கம்

சென்னை, டிச. 21—

"இந்திய அரசியல் சட்டத்துக்கு முதல் நெம்பர் எதிரி, ஆச்சாரியார்தான்! அவர் அரசியல் சட்டத்தைப் புறக்கணித்து நடக்கிறார். 'தங்களுக்கு ஓட்டுப்பெற சுற்றுப் பயணத்தின் பெயரால் பொருளை வீண் விரயம் செய்கிறார்.'"

—என்று சட்டசபை திராவிடக் கட்சித் தலைவர் என். சயம்பிரகாசம் அவர்கள், 19-ந் தேதி நடைபெற்ற சட்டசபையில், வரவு—செலவுத் திட்ட விவாதத்தின்போது பேசினார். தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"செலவுகளை ஏற்க சட்டசபை கூட்டத்தை முன்னரே கூட்டியிருக்கவேண்டும். ஏற்கனவே மூன்று மாதகாலம் இருந்து செலவான பின்னர், பாக்கி மூன்று மாத காலமிருக்கும்போது, இப்போது 'பட்ஜெட்'டைச் சமர்ப்பிக்க சபையைக்கூட்டியிருப்பது, சர்க்கார், சட்டசபையைப் பற்றி பொருட்படுத்தவில்லை என்று தான் பொருள்படுகிறது. போதுமான கல்வித் திட்டம் பற்றி சர்க்கார் நீதியாக நடந்து கொள்ளாதது கண்டிக்கத்தக்கது.

'டாக்டர்களுக்கு நிறைவேற்றப்பட்ட சம்பளம், நிர்ணயிக்கப்படாமல் இக்கட்சி சபையை சர்க்கார் மதிக்காதபோது சட்டசபையில் நாங்கள் கலந்துகொண்டு என்ன பயன்?

★

—உழைப்பாளர் கட்சித் தலைவர் எஸ். எஸ். ராமசாமி அவர்கள் பேசும்பொழுது குறிப்பிட்டதாவது:—

"பிற்பட்ட இன மக்களின் முன்னேற்றத்திற்கு, வரவு—செலவுத் திட்டத்தில் ஒன்றுமே இல்லை. அவர்கள் நலன்கள் கவனிக்கப்படாவிட்டால், நாட்டில் முன்னேற்றம் காண முடியாது. புதிய கல்வித் திட்டம் பிற்பட்ட மக்களுக்கு தீங்கை விளைவிக்கிறது. இத்திட்டத்தை சர்க்கார் கைவிட வேண்டும்"!

—என்று உழைப்பாளர் கட்சி உறுப்பினர் எஸ். எஸ். ராமசாமிப் படையாச்சி கூறினார்.

1953-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ந் தேதி வரையில் 1,590 அனுமதிச் சீட்டுகளும் அளிக்கப்பட்டன," என்று சட்டசபையில் கேள்வி நேரத்தின்போது மதுவிலக்கு அமைச்சர் ஜோதி வெங்கடாசலம் அம்மையார் கூறினார்.

1952-ல், 29 அனுமதிச் சீட்டுகளும், 1953-ல், 19 அனுமதிச் சீட்டுகளும் பெண்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன" என்றும் மதுவிலக்கு அமைச்சர் மேலும் கூறினார்.

இவ்வாறே, "1952, 1953-ம் ஆண்டுகளில், முறையே 416, 60 அனுமதிச் சீட்டுகள் இந்தியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன," என்றும் மேலும் விவரமளிக்கப்பட்டது.

● ● ●

"மேட்டூரிலுள்ள மின்சார நிலையத்திலிருந்து 313 தொழிலாளர்கள் ஆட்குறைப்பின் காரணமாக வேலையை இழந்தனர்," என்றும், "இவர்கள் குறிப்பிய காலமே பணி செய்திருப்பதால், எச்சலுகையும் பெற அருகதையற்றவர்கள்" என்றும் பொதுப்பணித் துறை அமைச்சர். கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

சட்ட சபையில் கேள்வி நேரம்

சென்னை, டிச. 20—

"சென்னை மாநிலத்தில் ஜூன் முதல் ஆகஸ்டு வரையுள்ள காலத்தில் 28 தொழில் நிலையங்கள், முழுதுமோ அல்லது பகுதியாகவோ மூடப்பட்டதால் 4,887 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர்," என்று சென்னை சட்டசபையில் தொழில்துறை அமைச்சர் டாக்டர் பூ கிருஷ்ணராவ் கூறினார்.

● ● ●

சென்னை ஸ்தல ஸ்தாபன அமைச்சர் இராஜாராம் நாயுடு "இதுவரை பஞ்சாயத்து சட்டத்தின் கீழ் 4,000 சிறு பஞ்சாயத்துக்களும், 2,083 பெரிய பஞ்சாயத்துக்களும் அமைக்கப்பட்டுள்ளன," என்றார்.

* *

"தங்களுக்கு நிலம் வேண்டுமென 63,000 அரிஜன மக்கள் மனு செய்து கொண்டனர்; அவர்களில் 3,500 பேருக்கு நிலம் கொடுத்தாகிவிட்டது. 36,000 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன," மீதி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது, என ரெவின்யூ மந்திரி ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

● ● ●

"1952-ம் ஆண்டில், மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் 2,174 அனுமதி (பெர்மிட்)ச் சீட்டுகளும்,

நடைபெற்ற......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"தாய்க்குலம் தாயகப் போராட்டத்தில் பெரும் பங்கு கொள்ளப் பாடுபடுகிறது! அவர்கள் நம்மை நமக்கே ஈந்தவர்கள்!

"அன்றே ஆச்சாரியார் வியந்தார்—'குழந்தைக்குப் பால் வாங்கிக் கொடுக்க வகையில்லாதவர்கள்தான், போராட்டத்தில் கலந்துகொள்ளுகிறார்கள்' என்று கூறினார்—இறுமாப்போடு!"

தாராவியில் தமிழ்ப் பள்ளி

பம்பாய், டிச. 19—

13—12—53ல், பள்ளிக் கட்டிடக் குழுவின் உறுப்பினர் கூட்டம் மகமது லெப்பை வாடியில் தோழர் எம். வி. துரைசாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது 24—1—54ல், குழுவின் 3-வது ஆண்டு நிறைவு விழா பொதுக் கூட்டத்தை நடத்துவதென்றும், காங்கிரஸ் ஆபீசுக்கு அருகில் உள்ள மைதானத்தை வாடகைக்கு அமர்த்தி அதில் தற்காலிகமான தியேட்டர் அமைத்துக் கொள்வது என்றும், அதில் கிடைக்கும் வருமானத்தை பள்ளிக் கட்டிட நிதிக்குச் சேர்த்துக் கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

"இனி ஆக்கிரமிப்பு இல்லை"

ரஷியாவுக்கு சர்ச்சில் உறுதிமொழி

லண்டன், டிச. 20—

"இட்லரிடம் இருந்த சகிப்புத் தன்மையை அறிவித்ததின் பேரில், 'இனிமேல் ஆக்கிரமிப்பு வராது,' என்ற உத்திரவாதத்தைப் பெற ரஷ்யாவுக்கு உரிமை உண்டு"

என்பதை பெர்முடா மாநாட்டில் அமெரிக்க பிரஞ்சு அதிபர்களிடம் தாம் வற்புறுத்தியதாக பிரதமர் சர்ச்சில் இன்று காமன்சில் வெளியிட்டார்.

"ரஷியா மிகுந்த வலிமையுடன் இருக்கிறது என்றாலும் இவ்வாறு உத்தரவாதம் அளிப்பது அவசியம் என்பதை சக அதிபர்களுக்கு வெற்றிகரமாக உணர்த்தினேன்" என்றார்.

திருப்பாப்புலியூர் தி. மு. கழகம்

13—12—53-ல், நடைபெற்ற தி. மு. கழக உறுப்பினர் கூட்டத்தில், தோழர்கள்: டி. ஆர். அரசு செயலாளராகவும், சே. இராமச்சந்திரன் துணைச் செயலாளராகவும், அ. சு. இராமச்சந்திரன் விளம்பர உறுப்பினராகவும், மு. பழனி பொருளாளராகவும், செ. சுப்பிரமணியம் மாவட்ட பிரதிநிதியாகவும், என். இராமமூர்த்தி, ஆ. இராசசேகரன், ஏ. செல்வம், வீ. அனந்தராமன், எம். தண்டபாணி; எ. செயராமன், பி. செயராமன், பி. செல்வமாறன், என். எஸ். கண்ணன், நாராயணன், சி. என். நம்பித்துரைசாமி உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தி. மு. இளைஞர் கழகம்

திலக்கோட்டை, டிச. 16—

13—12—53ல், இவ்வூர் திராவிட முன்னேற்ற இளைஞர் கழக உறுப்பினர் கூட்டம் பாரதிதாசன் பகுத்தறிவுப் படிப்பகத்தில் தோழர் மு. கருணாகரன் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் 1954-ம் ஆண்டிற்குப் புதிய நிர்வாகிகளாக தோழர்கள் மு. கருணாகரன் செயலாளராகவும், எம். தனிக்கொடி உதவி செயலாளராகவும், ச. நடராசன் பொருளாளராகவும், வே. செயராசு பெ. ராமசாமி மாவட்டப் பிரதிநிதிகளாகவும், மற்றும் 11 பேர்கள் நிர்வாகக் குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நரோடா தி. மு. கழகம்

13—12—53ல், ஆமதாபாத் நரோடா வட்ட தி. மு. க. கிளைக் கழக உறுப்பினர் கூட்டம் தோழர் கா. முனுசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் வே. கிருட்டிண மூர்த்தி செயலாளராகவும், மு. சுப்பையன் துணைச் செயலாளராகவும், கே. ஜி. சேகர் பொருளாளராகவும், மற்றும் 10 பேர்கள் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சென்ற ஆண்டு வரவு—செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டது.

தோழர்கள் ஆர். நடராசன், ஏ. தயாநிதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வேலூர் தி. மா. மு. கழகம்

13—12—53-ல், தோழர் குரு சோமையன் தலைமையில் கூடிய தி. மா. மு. கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் சிறை மீண்ட தோழர் மதியழகனைப் பாராட்டியும், 27—12—53-ல், வேலூருக்கு வரும் ஐயாவுக்கும், நகர மண்டபத்தில் நடக்கவிருக்கும் மாணவர்களின் கூட்டத்தில் வரவேற்பளிப்பது என்றும், பொங்கல் பெருநாளன்று தோழர் கருணாநிதி, சிற்றரசு ஆகியோரை வரவழைப்பதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

'தன்வினை தன்னைச் சுடும்; ஓட்டப்பம் வீட்டைச் சுடும்!'

'பிரகாசத்தைக் கவிழ்க்கச் சதி செய்தது சி. ஆர். மீது திரும்பிப் பாய்கிறது'

காசா சுப்பாராவின் ஆங்கில வார இதழ் 'சுதந்திரா' படப்பிடிப்பு!

"பிரகாசம் முதல் மந்திரியாக இருந்தபோது, அவரை முதுகுப் புறமாக இருந்து குத்தத் திட்டமிட்டு வளர்த்து, சாதித்துச் சந்தோஷப்பட்டது சாட்சாத் இந்த இராஜகோபாலாச்சாரியார்தான்."

"ஒழுங்கை, டாக்டர் நாயுடு மீறிவிட்டதாக, அவர்மீது புகார் சொல்லப் பட்டது. ஆனால், ஒழுங்கை முதல் முதல் மீறியது என்பது இராஜகோபாலாச்சாரியார்தான் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே."

"இராஜகோபாலாச்சாரியாருடைய போக்கும், செயலும், விவேகமும் இப்பொழுது பெரும் களங்கத்திற்கு உள்ளாக்கி இருக்கிறது. அதற்குக் காரணம், தன்னடக்கம் இல்லாததும், வஞ்சனையை மறக்காததும்தான்."

டெல்லியிலிருந்து திரும்பிய இராஜகோபாலாச்சாரியார், தலைமைப் பின்புறமாகத் தாக்குகிறார்களே என அறிக்கை விட்டிருக்கிறார். அவர் கூறுவது முற்றிலும் நியாயமே. ஆனால், தோழர் பிரகாசம், முதல் மந்திரியாக இருந்தபோது, இதே வேலையைச் செய்தது யார்?

பதவி, ஆட்டம் கொடுக்கிறது என்பதை அறிந்ததும், ஒரு தோழர்களுக்கு ஓட்டு, ராம பதவி வகிப்பது எவ்வளவு அவசியம் என்று பேசியதும் இராஜகோபாலாச்சாரியார்தான். தனக்கு எதிராக உள்ளவர்களை 'துரோகிகள்' என்றும், 'சதிகாரர்கள்' என்றும் வசைமாரி பாடியதும் அவரேதான்.

இராஜகோபாலாச்சாரியாருக்குப் பிடித்திருக்கிற ஆசை, பதவி வெறிதான் என்பதில் சந்தேகமில்லை.

அவர் முதல் மந்திரியாக இருப்பதை விரும்புகிறவன் நான். ஆனால், அனைவரையும் அணைத்துக்கொண்டு போக வேண்டும் என்கிற பண்பு அவரிடம் இல்லை.

'தான்' என்கிற அகம்பாவத்துடன் காரியங்களைச் செய்து கொண்டு போகிற நிலைதான் இந்த கஷ்டத்திற்குக் காரணம். ஆகவே, அவர் இதற்காக அனுபவிக்க வேண்டியதை அனுபவித்துத்தான் தீரவேண்டும்.

புதிய கட்சி......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

போலவும், என்னை தெருவிலே போகும் ஏழையைப் போலவும் அந்தப் பத்திரிகையில் கேலிச் சித்திரம் வரையப்பட்டிருந்தது. அன்றுதானா, அந்தப் பணக்காரக் கட்சிக்கு ஆதரவு தரமாட்டார் என எதிர்பார்க்கப்படுவதாயும் எழுதப்பட்டிருந்தது. தோழர் ஆதித்தனுக்கு ஏன் அந்த நிலை ஏற்பட்டது?

"தோழர் ஆதித்தனும், கம்யூனிஸ்டு நண்பர்களும் ஐக்கிய முன்னணி கலைந்துவிட்டதே என்று கருதினால், அவர்களுக்காக நான் பச்சாதாபப் படுகிறேன்.

"இன்றும் சொல்கிறேன்—போனத் தேர்தலில் நான் கூறினதுபோல், அவர்கள் நமது திராவிட நாடு பிரிவினைக் கோட்பாட்டை ஒப்புக்கொண்டால், மறுபடியும் ஐக்கிய முன்னணி கூடுமே.

"சட்டசபையிலே, திராவிட இயக்கத்திற்கு விரோதமாக ஐக்கியமுன்னணி போய்விடக் கூடாது என்பதற்காகத்தான் இந்த சட்டசபை திராவிடக் கட்சி தோன்றியது."

தாவரங்களிலிருந்து செயற்கைப் பட்டு தயாரிப்பு

லண்டன், டிச. 20—

பட்டுப் பூச்சிகளிலிருந்து பட்டு தயாரிப்பது குறைந்து வருவதை ஈடுகட்ட தாவரங்களிலிருந்தும் செயற்கை பட்டு தயாரிக்கலாம் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இயற்கை பட்டு துணிக்கும் இதற்கும் எவ்வித வித்தியாசமும் தென்படவில்லையாம்.

ஆந்திரப் பிரிவினையின் எதிரொலி

சென்னை, டிச. 18—

ஆந்திர மாநிலப் பிரிவினையின் காரணமாக சென்னை சர்க்கார் முதன்மைக் காரியாலயத்திலிருந்து குமாஸ்தாக்கள் 75, டைப்பிஸ்டுகள் 58, அடெண்டர்கள் 23, பணியாளர்கள் 62 ஆகியோருக்கு வேலை பறிபோயிற்று.

அவர்களில் குமாஸ்தாக்கள் 74, டைப்பிஸ்டுகள் 56, அடெண்டர்கள் 12, பணியாளர்கள் 22 முதலியவர்கள் தற்காலிகமான காலி இடங்களில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என பிரதமர் குறிப்பிட்டார்.

பிறப்பு

சென்னை, 18-வது வட்டம் இலக்கிய தோழர் வி. கே. என். மணி அவர்கள் துணைவியார் தோழியர் சரோஜா அம்மையாருக்கு, 12—12—53ல், ஓர் ஆண் மகவு பிறந்தது. தாயும், சேயும் நலம். இதன் நினைவாக "நம் நாடு" வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றியுடையது. —பொறுப்பாளர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அறிவகம் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, குறிக்கார நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: இ. என். அண்ணாதுரை, எம். ஏ.